# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## *2021 ஆம் ஆண்டு யூன் மாதம் 25 ஆம் திகதிய*
## பகுதி II இற்குக் குறைநிரப்பி

*(2021.06.28 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


# இலங்கை மருந்தியல் சங்கம்
# (கூட்டிணைத்தல்)

(தனியார் உறுப்பினர்களின் சட்டமூலம்)

**இலங்கை மருந்தியல் சங்கத்தை கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ மதுர விதானகே
அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது


*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா 23.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**இலங்கை மருந்தியல் சங்கம் (கூட்டிணைத்தல்)**

## இலங்கை மருந்தியல் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கான தொரு சட்டம்

**முன்னுரை**

''இலங்கை மருந்தியல் சங்கம்'' என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான சங்கமொன்று, அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட சங்கத்தோடு தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கென இதுகாலவரை இலங்கையில் தாபிக்கப் பட்டுள்ளதாதலாலும்:

அத்துடன், சொல்லப்பட்ட சங்கமானது எப்பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தியும் வந்துள்ள தாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாத லாலும் சொல்லப்பட்ட விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாகவிருக்குமாதலாலும்:

ஆகவே, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**சுருக்கப் பெயர்**

***1*.** இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, இலங்கை மருந்தியல் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

**இலங்கை மருந்தியல் சங்கத்தைக் கூட்டிணைத்தல்**

***2*.** (1) இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் ''சங்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை மருந்தியல் சங்கத்தில் தற்போது உறுப்பினர்களாகவுள்ள வர்களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களாக இதன்பின்னர் சேர்த்துக் கொள்ளப் படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் ''கூட்டிணைக்கப்பட்டகுழு'' எனக் குறிப்பீடு செயயப்படும்) இலங்கை மருந்தியல் சங்கம் என்னும் பெயரின்கீழும் மகுடத்தின்கீழும் இடையறாவழியுரிமை கொண்டதாக இருத்தல்

வேண்டும்; அத்துடன் அப்பெயர்கொண்டு அது வழக்குத்தொடுக்கலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்; பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், அது விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் கொண்டதாகவிருத்தல் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவானது, 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவும் சமூக சேவைகள் ஒழுங்கமைப்பு (பதிவுசெய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின் கருத்துக்குட்படவும் அதன் நோக்கத்துக்காகவும் வலிந்துதவும் சமூக சேவை ஒழுங்கமைப்பொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள், கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களினது முகாமைக்கும் அது தொடர்பாகவும் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பொதுக் குறிக்கோள்கள்

3. (1) கூட்டிணைக்கப்பட்ட குழு அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது:-

(அ) இலங்கையில் மருந்தியல் அறிவியலையும் அதன் பயன்பாடுகளையும் மேம்படுத்துதலும் முன்னெடுத்துச் செல்லுதலும்;

(ஆ) மருந்துகள் சார்ந்த அறிவினைப் பெறுதல், பரப்புதல் மற்றும் பரிமாற்றம் செய்தலை ஊக்குவித்தல்;

(இ) அனைத்து மட்டங்களிலும் மருந்தியல் கல்வியை மேம்படுத்துதல்;

(ஈ) மருந்துகள்சார்ந்த அடிப்படை ஆராய்ச்சிகளை மேம்படுத்துதலும் ஊக்குவித்தலும்;

(உ) அதன் உறுப்பினர்களின் தொழில்முறை நடவடிக்கைகளிலும் பொது நடத்தைகளிலும் உயர்தரங்களை பேணுதலை உறுதிசெய்தல்;

(ஊ) பிற அறிவியல் மற்றும் தொழில்முறை அமைப்புகளுடன் தொடர்புகளைப் பேணுதல்; அத்துடன்

(எ) இலங்கையில் மருந்தியல் தொழிலின் அந்தஸ்து நிலையை மேம்படுத்துதல்.

*அரசாங்கத்தின் அல்லது மாகாணத்தின் அமைச்சினது அல்லது திணைக்களத்தினது பணியுடன் முரண்பாடு இல்லா திருப்பதனை கூட்டிணைக்கப் பட்ட குழு உறுதிப் படுத்துதல்*

**4.** கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்கள், கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிக்கும் அரசாங்கத்தின் அல்லது ஏதேனும் மாகாண சபையின் ஏதேனும் அமைச்சினால் அல்லது திணைக்களத்தினால் ஒரே நேரத்தில் நிறைவேற்றப்படுகின்ற ஏதேனும் பணிக்கும் இடையே முரண்பாட்டை உருவாக்காத வகையிலான அத்தகைய முறையில் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

*கூட்டிணைக்கப் பட்ட குழுவின் அலுவல்களை முகாமை செய்தல்*

**5.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கும் அமைய, கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களினது முகாமையும் நிருவாகமும் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கிணங்கத் தேர்ந்தெடுக்கப்படக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான பதவிதாங்குநர்களைக் கொண்டுள்ள பேரவையொன்றினால் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(2) (அ) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முற்போந்த நாளன்று பதவிவகிக்கின்றவர்களான சங்கத்தின் பேரவை உறுப்பினர்கள் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளினால் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் முதலாவது பேரவை நியமிக்கப்படும்வரை அல்லது தேர்ந்தெடுக்கப்படும்வரை கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இடைக்காலப் பேரவையொன்றாக, (ஆ) என்னும் பந்தியின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கமைய, பணியாற்றுதல் வேண்டும்.

(ஆ) 7 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, இடைக்காலப் பேரவையானது, இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாக

விராதவையும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இடைக்கால நிருவாகம் தொடர்பிலானவையுமான விதிகளை ஆக்குவதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும்.

(இ) இடைக்காலப் பேரவையின் ஏதேனும் முடிபு, அத்தகைய கூட்டத்தில் சமுகமளித்துள்ள அதன் உறுப்பினர்களின் பெரும்பான்மையினால் எடுக்கப்படுதல் வேண்டும்.

(ஈ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் முதலாவது பேரவையானது இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்து ஓராண்டினுள் நியமிக்கப்படுதல் அல்லது தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(3) (அ) பேரவையின் ஒவ்வொரு பதவிதாங்குநரும் ஓராண்டுக் காலப்பகுதியொன்றுக்கு நியமிக்கப்படுதல் அல்லது தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய எவரேனும் அலுவலர், போஷகர் அல்லது மதியுரைநர் மீளநியமிக்கப்படுவதற்கு அல்லது மீளத்தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும். தலைவர் அதிகபட்சம் இரண்டாண்டு காலப்பகுதியொன்றுக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(ஆ) பதவிதாங்குநரொருவரின் இறப்பு, பதவிவிலகுகை, இயலாமை அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுகின்றமை காரணமாக வெற்றிடமொன்று ஏற்படும் பட்சத்தில், பேரவையானது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளைக் கருத்திற்கொண்டு, அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஆளொருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும் அல்லது நியமித்தல் வேண்டும்.

(இ) பந்தி (ஆ) வின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட ஆள், அவர் எவ்வுறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள பாகத்துக்கு மட்டுமே பதவிவகித்தல் வேண்டும்.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் தத்துவங்கள்

**6**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டிணைக்கப்பட்ட குழுவானது பின்வரும் தத்துவமுட்பட, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கான செயல்களை செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் தத்துவமுடையதாதல் வேண்டும்:-

(அ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கங்களுக்காகத் தேவைப்படக் கூடிய காணிகளை அல்லது கட்டிடங்களை கொள்வனவு செய்தல், கொள்ளுதல், வாடகைக்கு எடுத்தல், நிர்மாணித்தல், புனரமைத்தல் மற்றும் வேறுவகையாகப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் பேரவையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக அவற்றை கையுதிர்த்தல்;

(ஆ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை எய்துவதற்கு அல்லது அதன் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் அல்லது உடன்படிக்கைகளையும் நேரடியாக அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரின் அல்லது முகவரினூடாகச் செய்துகொள்ளு தல், புரிதல் அல்லது நிறைவேற்றுதல்;

(இ) பிணைப்பொறுப்புக்கள் அல்லது பிணைப்பொறுப்புக்கள் இன்றி நிதிகளை கடனாகப் பெறுதல் அல்லது திரட்டுதல் மற்றும் காசாக அல்லது பொருளாக மானியக் கொடைகளை, கொடைகளை அல்லது நன்கொடைகளை பெறுதல்:

ஆயின், கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்கு அளிக்கப்பட்ட எல்லா வெளிநாட்டு மானியக்கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகள் தொடர்பிலும் பேரவையானது வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்தின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளு தல் வேண்டும்;

(ஈ) நாணயமாற்றுண்டியல்கள், காசோலைகள், வாக்குறுதிப் பத்திரங்கள் மற்றும் வேறு கைமாற்றத்தகு சாசனங்களைத் தயாரித்தல், வரைதல், ஏற்றுக் கொள்ளுதல், கழிப்பனவு செய்தல், புறக்குறிப்பிடுதல், அவை தொடர்பில் பேச்சுவார்த்தை நடாத்துதல், அவற்றை வாங்குதல், விற்பனை செய்தல் மற்றும் வழங்குதல் அத்துடன் ஏதேனும் வங்கியில் கணக்குகளைத் திறத்தல், தொழிற் படுத்துதல், பேணுதல், முடிவிடுதல்;

(உ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கங்களுக்கு உடனடியாகத் தேவைப்படாத எவையேனும் நிதிகளைப் பேரவை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் முதலீடு செய்தல்;

(ஊ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் ஏதேனும் சட்டமுறையான நம்பிக்கைப் பொறுப்பை அல்லது ஏதேனும் நிலச்சொத்தை அல்லது தனிப்பட்ட ஆதனத்தைப் பொறுப்பேற்றல், ஏற்றுக் கொள்ளுதல், நிறைவேற்றுதல், செயல்நிறைவேற்றுதல் மற்றும் நிருவகித்தல்;

(எ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவலர்களையும், சேவையாளர்களையும் நியமித்தல், தொழிலுக்கமர்த்துதல், பதவிநீக்குதல் அல்லது அவர்களின் சேவைகளை முடிவுறுத்துதல் மற்றும் அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தல் அத்துடன் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய சம்பளங்களையும், படிகளையும், அவர்களுக்குச் செலுத்துதல்;

(ஏ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் விரிவுரைகள், கருத்தரங்குகள் மற்றும் மாநாடுகளை ஒழுங்குபடுத்துதல்;

(ஐ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களைக் கொண்டுள்ள வேறு உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நிறுவனங்களுடன் தொடர்புகளைப் பேணுதல் மற்றும் ஒருங்கிணைத்தல்;

(ஒ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கங்களுக்காக இலங்கையிலுள்ள அல்லது வெளிநாடுகளிலுள்ள உறுப்பினர்கள், அலுவலர்கள் மற்றும் சேவையாளர் களுக்குப் பயிற்சியளித்தல்;

(ஓ) பேரவையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக, கூட்டிணைக்கப்பட்ட குழுவின் எவையேனும் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறாகவும் அவசியமாகின்றபோதும் ஏதேனும் குழுவை நியமித்தல்; அத்துடன்

(ஔ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை எய்துவதற்கான அத்தகைய செயல்களையும் காரியங்களையும் பொதுவாகச் செய்தல்.

**7.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழு காலத்துக்குக்காலம், கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமளித்து வாக்களிக்கின்ற உறுப்பினர்களின் மூன்றிலிரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் பெரும்பான்மைகொண்டும், பின்வரும் எல்லாக் கருமங்களுக்காகவும் அல்லது அவற்றுள் எவற்றுக்காகவும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாக விராத விதிகளைக் காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டிணைக்கப் பட்ட குழுவுக்கு சட்டமுறையானதாதல் வேண்டும்:- கூட்டிணைக்கப் பட்ட குழுவின் விதிகள்

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கஞ் செய்தல், உறுப்பினர் களைச் சேர்த்துக்கொள்ளுதல், மீளப்பெறுதல், வெளியேற்றுதல் அல்லது அவர்கள் பதவிவிலகுதல் மற்றும் அத்தகைய உறுப்பினர்களினால் செலுத்தப்படற் பாலனவான கட்டணங்கள்;

(ஆ) பேரவையின் பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல் அல்லது பதவி தாங்குநர்களைப் பதவியிலிருந்து அகற்றுதல் மற்றும் பதவிதாங்குநர்களின் தத்துவங்களும், கடமைகளும் பணிகளும்;

(இ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பல்வேறு அலுவலர்களினதும், சேவையாளர்களினதும் நியமன நியதிகளும் நிபந்தனைகளும் மற்றும் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும் ;

(ஈ) பேரவையின் அல்லது வேறேதேனும் குழுவின் கூட்டங்களைக் கூட்டுவதிலும் நடாத்துவதிலும் பின்பற்றப் படவேண்டிய நடவடிக்கைமுறை, அத்தகைய கூட்டங்கள் பற்றிய அறிவித்தல்களும், நிகழ்ச்சிநிரலும் மற்றும் கூட்டநடப்பெண்ணும் மற்றும் அதில் அலுவல்களை நடாத்துதலும்;

(உ) பேரவையின் அல்லது வேறேதேனும் குழுவின் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினரொருவராக இருப்பதற்கான தகைமைகளும் தகைமையீனங்களும்;

(ஊ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஆதனத்தை நிருவகித்தல் மற்றும் முகாமை செய்தல் ; அத்துடன்

(எ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களைப் பொதுவாக முகாமைசெய்தல் மற்றும் கூட்டுத்தாபனத்தைக் கலைத்தல்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி, இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதியொன்றென்றாற்போன்று, அதேபோன்ற கூட்டத்திலும் மற்றும் அதே முறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், ஒழிக்கப்படலாம் அல்லது அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம்.

(3) இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகள் மூன்று மாதங்களினுள் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

(4) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்கள் எல்லா நேரங்களிலும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளுக்கு அமைந்தோராக இருத்தல் வேண்டும்.

**8**. பேரவையானது உறுப்பினர்கள் பற்றிய இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும். இதில் உறுப்பினர்களின் பெயர், முகவரி மற்றும் வேறு இயைபான விபரங்கள் இடப்படுதல் வேண்டும். இடாப்பு

**9**. (1) கூட்டிணைக்கப்பட்ட குழு அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். கூட்டிணைக் கப்பட்ட குழுவின் நிதியம்

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்காகவும் அதன் கணக்காலும் கொடை, இறுதிவிருப்பாவணக் கொடை, விருப்பாவண வழக்கொடை, நன்கொடை, ஒப்பப்பணம், கட்டணங்கள் அல்லது மானியக்கொடை என்ற வகையாகப் பெறப்பட்ட எல்லாப் பணங்களும், பிரிவு 6 (இ) இன் ஏற்பாடுகளுக்கமைய, பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(3) கூட்டிணைக்கப்பட்ட குழு இச்சட்டத்தின் கீழ் அதன் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் அதனால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படுகின்றவாறான எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

**10**. (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நிதியாண்டு ஏப்பிறல் முதலாம் நாளிலிருந்து அடுத்துவரும் ஆண்டின் மாச்சு முப்பத்தோராம் நாள்வரையாதல் வேண்டும். கணக்குகளும் கணக்காய்வும்

(2) கூட்டிணைக்கப்பட்ட குழு அதன் வருமானமும் செலவினமும், சொத்துக்களும், பொறுப்புக்களும் மற்றும் அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் வேறெல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குகள் வைத்திருக்கப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் கணக்குகள், அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி, கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் அல்லது கணக்காய்வாளர்

தலைமையதிபதியினால் நியமிக்கப்பட்டவொரு தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் வருடாந்தம் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன் கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் அல்லது வேறெவரேனும் தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் சான்றுப்படுத்தப்படுதலும் வேண்டும்.

(4) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, ''தகைமைபெற்ற கணக்காய்வாளர்'' என்பது-

(அ) இலங்கையில் பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராகவிருப்பதோடு, கணக்காளர் ஒருவராகத் தொழில்புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை உடையவருமான ஆள் ஒருவர் ; அல்லது

(ஆ) எந்தக் கணக்காளர் குழுமமொன்றின் ஒவ்வொரு வதிவுள்ள பங்காளரும் இலங்கையின் பட்டயம்பெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவிருப்பதோடு, கணக்காளர் ஒருவராகத் தொழில்புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்படட சான்றிதழொன்றை உடையவராகவும் இருக்கின்றாரோ அந்தக் கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

வருடாந்த அறிக்கை

**11.** (1) ஒவ்வொரு நிதியாண்டிற்காகவும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் செயற்பாடுகள் பற்றிய அறிக்கையொன்றைப் பேரவை தயாரித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அறிக்கையைக் கணக்காளர் தலைமையதிபதியினால் அல்லது வேறெவரேனும் தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் சான்றுப்படுத்தப்பட்டதான கணக்குகளின் கணக்காய்வு செய்யப்பட்ட கூற்றுடன் சேர்த்து சுகாதாரம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின்

அமைச்சுச் செயலாளருக்கும், 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவும் சமூக சேவைகள் ஒழுங்கமைப்பு (பதிவுசெய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட வலிந்துதவும் சமூக சேவைகள் ஒழுங்கமைப்புகள் பதிவாளருக்கும், அத்தகைய அறிக்கை எந்த ஆண்டு தொடர்பானதோ அந்த ஆண்டை அடுத்துவரும் ஆண்டின் ஆறு மாதங்கள் முடிவுறு முன்னர் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(2) நிதியாண்டின்போது கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் பெறப்பட்ட வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் பணங்கள் தொடர்பாகத் தனிவேறான கணக்கொன்று (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கையுடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

சங்கத்தினால் செலுத்தப்படற் பாலவையும் சங்கத்திற்குச் செலுத்தப்படற் பாலவையுமான தனிசுகள்

**12.** இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்றுள்ள சங்கத்தின் எல்லாத் தனிசுகளும் பொறுப்புகளும், இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று சங்கத்துக்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் செலுத்தப்படற்பாலன வான எல்லா ஒப்பப்பணங்களும், உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்கு செலுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டிணைக்கப் பட்ட குழு அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்

**13.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய கூட்டிணைக்கப்பட்ட குழுவானது ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதி விருப்பாவணக் கையுதிர்ப்பு என்பவற்றின் பயனைக் கொண்டு அல்லது வேறு வகையாக அதற்குரிதாக வரக்கூடிய அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தை எடுப்பதற்கும் வைத்திருக்கவும் சட்டத்தில் இயன்றதாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டுமென்பதுடன் அத்தகைய எல்லா ஆதனங்களும் இச்சட்டத்தின் நோக்கத்துக்காக வும், 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளுக்கமையவும், அவற்றை விற்பனை செய்வதற்கான, ஈடுவைப்பதற்கான, குத்தகைக்குக் கொடுப்பதற்கான, கொடுத்து மாற்றுவதற்கான அல்லது வேறு வகையாகக் கையுதிர்ப்பதற்கான தத்துவத்துடன் கூட்டிணைக் கப்பட்ட குழுவினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

பணங்களையும் ஆதனத்தையும் பயன்படுத்துதல்

**14.** எவ்வாறாயினும் பெறப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணங்களும் ஆதனமும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை மேம்படுத்துமுகமாக மட்டுமே பயன்படுத்தப் படுதல் வேண்டு மென்பதுடன் அதன் பாகமெதுவும் பங்கிலாபம், மிகையூதியம் அல்லது இலாபம் என்ற வகையாக நேரடியாக அல்லது நேரடியாக வல்லாமல் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர் களுக்குச் செலுத்தப்படுதலோ அல்லது கைமாற்றப்படுதலோ ஆகாது.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் இலச்சினை

**15.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இலச்சினையானது, தலைவரினதும், செயலாளரினதும், பொருளாளரினதும் முன்னிலையிலல்லாது எத்தகையதுமான சாசனமெதிலும் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் தாம் சமுகமாயிருந்தனர் என்பதற்கு அத்தாட்சியாக அச்சாசனத்தில் தமது பெயர்களை எழுதி ஒப்பமிடல் வேண்டும். அத்தகைய ஒப்பமிடல் சாட்சியாக எவரேனும் ஆள் ஒப்பமிடு வதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இலச்சினை, பேரவையினால் முடிபு செய்யப்படக்கூடியவாறாகப் பேரவையின் பதவி தாங்குநர் ஒருவரின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்.

கலைப்பின்மீது எஞ்சியருப்பதான ஆதனம்

**16.** கூட்டிணைக்கப்பட்ட குழு கலைக்கப்பட்டதன்மேல் அதன் எல்லாத் தனிசுகளையும் பொறுப்புக்களையும் திருப்திசெய்ததன் பின்னர் எத்தன்மைத்தானதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படலாகாது. ஆனால் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களைக் கொண்டதும் அத்துடன் அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளிப்பதிலிருந்து அதன் விதிகளினால் தடைசெய்யப்பட்டதுமான வேறேதேனும் நிறுவனத்துக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காகத் தோதான நிறுவனமானது, பொதுக் கூட்டமொன்றில் சமுகமளித்துள்ள உறுப்பனர்களின் வாக்குப் பெரும்பான்மை மூலம் கலைத்தலுக்கு நேர்முன்னர் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

குடியரசின் உரிமைகளைப் பேணல்

**17**. இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசினது உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**18**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.